**முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**முன்னிலை : திரு. A. தமிழ்செல்வன், எம்.எல்.,**

**முதன்மை சார்பு நீதிபதி, விழுப்புரம்**

**2026ம் ஆண்டு ஜனவரி திங்கள் 30ம் நாள் வெள்ளிக்கிழமை**

**I.A. No.555/2025**

**in**

**OS.No.1336/2024**

**(CNR.NO. TNVP02-003759-2024)**

1. வீரப்பக்கவுண்டர் (இறந்துவிட்டார்)
2. ஏழுமலை
3. சிவலிங்கம்
4. ராஜேஸ்வரி .... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

விஜயலட்சுமி ..... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு 24.10.2025 தேதியில் தாக்கல் செய்யப்பட்டு கடந்த 28.01.2026 அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ராஜகோபால், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கிருபாபுரி, அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலினை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**உத்தரவு**

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இம்மனு கட்டளை VIII விதி 1-A(3)-சி.பி.சி-யின் கீழ் மேற்படி அசல் வழக்கில் தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமத்தை மன்னித்து தற்போது

மனுதாராகள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணங்களை பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்து வழக்கை மேல்நடத்த அனுமதி கோரி பரிகாரம் கோரப்பட்டுள்ளது.

## 2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் பின்வருமாறு :-

மனுதாரர் தரப்பில் தான் இம்மனுவில் 4ம் மனுதாரர் என்றும் அசல் வழக்கில் 4ம் பிரதிவாதி என்றும், மற்ற மனுதாரர்களின் சார்பாகவும் இந்த பிரமாண பத்திரிக்கையை தாக்கல் செய்வதாகவும், மேற்படி அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/வாதி வழக்கு பி, சி பட்டியல் சொத்துக்களை பொறுத்து விளம்புகை, பாக உரிமை, சொத்து சுவாதீன பரிகாரம் கோரியும், இதர பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்து அதில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளது என்றும், இம்மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்குக்கு மிக முக்கியமான ஆவணங்கள் தற்போது தான் கிடைக்கப்பெற்றதாகவும், மேற்படி ஆவணங்களை விசாரித்தால் வழக்கு பற்றிய உண்மை விபரம் நன்கு தெரியும் என்றும், எனவே தற்போது தாக்கல் செய்யும் ஆவணங்களை மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் ஆவணங்களாக குறியீடு செய்து வழக்கை மேல்நடத்தக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 3. எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபணையின் சுருக்கம்:-

மனுதாரரின் மனு சுத்த தப்பும் பொய்யும், மோசமுமானது சட்டப்படி ஏற்புடையதல்ல இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடிக்கு உகந்தது என்றும், உண்மையில் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள 1 முதல் 10 ஆவணங்கள் வழக்கு சொத்திற்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் கிடையாது என்றும், மேற்படி ஆவணங்களை பற்றி மனுதாரர்கள் அவர்களது எதிர்வழக்குரையில் தெரிவிக்கவில்லை என்றும், அதனால் அதனை சான்றாவணங்களாக குறியீடு செய்ய முடியாது என்றும், மேற்படி ஆவணங்கள் தொடர்பாக மனுதாரர் சாட்சியமும் அளிக்க முடியாது என்றும், மேற்படி ஆவணங்களை நிராகரிக்க வேண்டும் என்றும், இந்நிலையில் மனுதாரரின் மனு நிலைக்கத்தக்கது அல்ல என்பதால் அதனை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

4. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்கள், எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியமோ, சான்றாவணங்களோ குறியீடு செய்யப்படவில்லை.

**5. தீர்வுக்கான பிரச்சினை :-**

இந்த மனு அனுமதிக்கத்தக்கதா அல்லது இல்லையா ?

**6. தீர்வு :-**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

7. மனுதாரர் தரப்பில் மனுதாரரின் வழக்கறிஞர் தனது வாதுரையில் வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/வாதி வழக்கு பி, சி பட்டியல் சொத்துக்களை பொறுத்து விளம்புகை, பாக உரிமை, சொத்து சுவாதீன பரிகாரம் கோரியும், இதர பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்து அதில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளது என்றும், இம்மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்குக்கு மிக முக்கியமான ஆவணங்கள் தற்போது தான் கிடைக்கப்பெற்றதாகவும், மேற்படி ஆவணங்களை விசாரித்தால் வழக்கு பற்றிய உண்மை விபரம் நன்கு தெரியும் என்றும் எனவே பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்யக்கோரி வாதிட்டார்.

8. எதிர்மனுதாரர் தரப்பில், எதிர்மனுதாரரின் வழக்கறிஞர் தனது வாதுரையில் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள 1 முதல் 10 ஆவணங்கள் வழக்கு சொத்திற்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் கிடையாது என்றும், மேற்படி ஆவணங்களை பற்றி மனுதாரர்கள் அவர்களது எதிர்வழக்குரையில் தெரிவிக்கவில்லை என்றும், அதனால் அதனை சான்றாவணங்களாக குறியீடு செய்ய முடியாது என்றும், மேற்படி ஆவணங்கள் தொடர்பாக மனுதாரர் சாட்சியமும் அளிக்க முடியாது என்றும், மேற்படி ஆவணங்களை நிராகரிக்க வேண்டும், இந்நிலையில் மனுதாரரின் மனு நிலைக்கத்தக்கது அல்ல என்பதால் அது தள்ளுபடி செய்யப்படவேண்டும் வாதிட்டார்.

9. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்கு தேவையான முக்கியமான ஆவணங்கள் என்றும், அதனை அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய கோரியுள்ளதை பரிசீலிக்கையில் அசல் வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு விசாரணைக்காகத்தான் வாய்தா வைக்கப்பட்டுள்ளது இந்நிலையில் பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டியது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும். மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் தற்போது தாக்கல் செய்யும் ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு பொருந்தாது என்றும் கூறியுள்ளார்.

10. இம்மனுவில் மனுதாரர்கள் தற்போது கூடுதல் ஆவணங்களை முன்னிலைப்படுத்தியுள்ளதை பார்க்கும்போது மேற்படி அசல் வழக்கில் சாட்சிகளை தீர விசாரணை செய்து வழக்கு ஆவணங்களை குறியீடு செய்து தீர்வு கண்டால் நீதிக்கும், நியாயத்திற்கும் உகந்ததாக இருக்கும், மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்வதற்கு போதுமான ஆட்சேபனை எதுவும் குறியிடப்படவில்லை. மேலும் இதுபோன்ற வழக்குகள் பெருகுவதை தடுக்கவும், மேற்படி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எந்தவித பாதகமும் ஏற்படாது என்பதால் மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் விசாரணை செய்து ஆவணங்களை குறியீடு செய்ய தாக்கல் செய்துள்ள இம்மனுவை நீதியின்பால் அனுமதித்து இம்மனுவில் முடிவு காணப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் 30.01.2026 இன்று பகரப்பட்டது.

A TAMILSELVAN

Digitally signed by A TAMILSELVAN
Date: 2026.02.03 13:18:14 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-**

இல்லை.

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-**

இல்லை.

A TAMILSELVAN

Digitally signed by A TAMILSELVAN
Date: 2026.02.03 13:18:20 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
விழுப்புரம்.